18.04.2026

அ.வ.எண்.377/2008

வா.சா.1 கிருஷ்ணன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. வா.சா.ஆ.1கிரையப்பத்திரத்தில் 2 சர்வே எண்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சர்வெ எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன கிரைய பத்திரத்தில் உள்ள சொத்துகள் புறம்போக்கு நிலமா அல்லது பட்டா நிலமா என்றால் பட்டா நிலமும் உள்ளது, புறம்போக்கு நிலமும் உள்ளது. அந்த இரண்டு நிலங்களை சேர்த்துதான் வா.சா.ஆ.1ல் பதிவு செய்யபடாத கிரைய ஆவணத்தில் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பதிவு செய்யபடாத கிரைய பத்திரம் யார் பெயரில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அம்மாகண்ணு பெயரில் கிரையம் வாங்கியுள்ளோம். அம்மாகண்ணு என்பவர் எனது தாயார், அவர் தற்போது உயிருடன் இல்லை.

2. வா.சா.ஆ.1 ஏன் பதிவு செய்யவில்லை என்றால் அந்த சமயத்தில் எங்களுக்கு சூழ்நிலை சரியாக இல்லாததால் பதிவு செய்யவில்லை. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத கிரைய பத்திரத்தை எவ்வளவு நாள்களுக்குள் பதிவு செய்யபட வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது அம்மா அம்மாகண்ணு இறந்தபிறகு அவர் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை வைத்து நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன், எனவே எனக்கு இந்த வழக்கை நடத்துவதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல, நாங்கள்தான் அம்மாகண்ணுவின் வாரிசுகள்

ஆவோம். எனது அம்மா அம்மாகண்ணு இறந்தபிறகு வா.சா.ஆ.1 பதிவு செய்யபடாத கிரைய பத்திரத்தை பதிவு செய்து தர சொல்லி 1ம் பிரதிவாதியை அணுகவில்லையா என்றால் அணுகினேன், ஆனால் அவர் செய்து தரவில்லை.

3. எனது அம்மா அம்மாகண்ணு உயிருடன் இருந்த காலத்தில் வா.சா.ஆ.1 பதிவு செய்ய தர சொல்லி கேட்டார்களா என்றால் இல்லை. எனவே பதிவு செய்யபடாத கிரைய பத்திரத்தை கால நிர்ணயத்திற்குள் பதிவு செய்தால்தான் அது செல்லும், சொத்து உரிமை கிடைக்கும், அவ்வாறு பதிவு செய்யாததால் எனக்கு வா.சா.ஆ.1ல் உள்ள சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 வைத்து நான் எந்த விளம்புகை பரிகாரமும் கேட்க முடியாது என்றால சரியல்ல. தாவாசொத்து சம்பந்தமாக வரி ரசீதுகள் கட்டவில்லை என்றால் முதல் 5 வருடம் கட்டினேன், அதன்பின்பு கட்டவில்லை.

4. இந்த வழக்கில் வா.சா.ஆ.2 வரி ரசீதை தவிரத்து வேறு ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை, மேலும் அந்த ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பட்டா எண் இல்லை என்றால் 1ம் பிரதிவாதிக்கு பட்டா உள்ளது, ஆனால் அந்த ஆவணத்தில் இல்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது, ஏனென்றால் எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ.2 வரி ரசீது ஆவணத்தில் வரி செலுத்திய நபர் குப்பன் என்பவர் எனது அண்ணன் ஆவார். மேற்சொன்ன வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண் இல்லை என்று வருவாய் துறையில் கேட்டோமா

என்றால் கேட்டோம். வருவாய் துறையில் புதிய ரசீதுகள் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். மேற்சொன்ன புதிய ரசீதுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவாசொத்து எனது சுவாதீனத்தில் இல்லை என்பதால்தான் கிஸ்து ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை, சுவாதீனத்தில் இருந்திருந்தால் முறையான வரி ரசீது தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.1 பதிவு செய்யபடாத எனது அம்மா பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை வைத்து விளம்புகை பரிகாரம் கோர முடியாது எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவாசொத்திற்கு நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோருவதற்கு எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. எனவே நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எனவே சுவாதீனத்தில் இல்லாத சொத்திற்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோருவதற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.